பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை



## நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்

ஏசாயா 53:5

செய்தி மலர்
2016
மார்ச்

இதழ் : 10
மலர் : 16



# தலைவர் உரை

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையில் இந்த 2016-ம் வருடத்தின் 3-வது மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை நமக்கு தந்திருக்கிறபடியால் கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம்.

பிப்ரவரி மாதம் சபையின் மூலம் நடைபெற்ற எல்லா ஊழியங்களிலும் ஆராதனைகளிலும் தேவ பிரசன்னம் நம்மோடு இருந்ததற்காகவும் நமது தனிப்பட்ட மற்றும் குடும்ப வாழ்க்கையில் தேவ கிருபை நம்மை நடத்தியதற்காகவும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். இந்த வருடத்தில் சபையில் வாக்குத் தத்தத்தின்படி என் நாமத்தினால் நீங்கள் எதைக் கேட்டாலும் நான் அதை செய்வேன் என்று வாக்கு பண்ணினவர் மாறாதவராயிருக்கிறார்.

"நாம் வேண்டிக்கொள்வதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்கு செய்ய வல்லவராகிய அவருக்கு" எபே-3:20.

1. நாம் அறிந்திருக்கிறபடி மத்-7:7,8-ல் கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகிறான் என்று ஆண்டவர் இயேசு சொன்னார். ஏதைக் கேட்டாலும் அதை அவரிடம் பெற்றுக்கொள்ளமுடியும்.

2. லூக்-6:37,38-ன்படி கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும் அமுக்கி குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்.

நாம் எளியவர்களுக்கு கொடுக்கும் போது அது நமக்கு சரிந்து விழும்படி கொடுக்கப்படும், இரக்கம் தேவை, இந்த மாதத்தில் சரிந்து விழும்படி நமக்கு கிடைக்க வேண்டுமானால், எளியவர்களை நினைவு கூர்வோம். இந்த lent காலத்தில் அநேகர் உபவாசித்து தங்களை ஒடுக்கலாம். அதே நேரத்தில்

3 ஏசா-58:7-ல் உள்ளபடி பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தை பகிர்ந்து கொடுக்கிறவனும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம், என்று ஆண்டவர் நம்மை பார்த்து சொல்கிறார். இது நமது சரீரத்தை ஒடுக்குவது மாத்திரம் அல்ல நம்முடைய சுபாவத்தில் இரக்கம் வரவேண்டும் என்பதை தேவன் விரும்புகிறார். அவர் இரக்கம் உள்ளவராய் இருப்பதைப்போல நாமும் இரக்கம் உள்ளவராய் இருக்கவேண்டும் என்று விரும்புகிறார். ஆனபடியால் திக்கற்றவர்களுக்கு, எளியவர்களுக்கு இரங்கி கொடுப்போம். ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான். அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார். நீதி-19:17. நாம் மற்றவர்களின் இக்கட்டு சூழ்நிலையில் உதவும்போது நம்முடைய இக்கட்டு காலத்தில் அது நமக்காய் சேர்த்து வைக்கப்படுகிறது அதுமாத்திரமல்ல அது பரலோகத்திலும் சேர்த்து வைக்கப்படுகிறது. அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை. அங்கே திருடன் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை மத்-6:20.

நாம் நமது தேவைகட்கு அல்லது நமது குடும்பத்திற்கு விசேஷமாக நமது பிள்ளைகட்கு தாராளமாக செலவழிப்போம். போதுமான காரியத்திற்கு செலவு பண்ணலாம். அளவுக்கு அதிகமாய் செலவழிப்போம். ஆனால் அதே நேரத்தில் இக்கட்டில் உள்ளவர்களைப் பார்க்கும்போது அவர்கள் தேவைகளை பார்க்கும்போது அதிகமாய் கணக்கு பார்த்துக் கொடுப்போம். இல்லையேல் கொடுக்காமலேயே ஜெபித்து அனுப்புவோம், உங்களுக்காய் ஜெபிக்கிறோம் என்று சொல்வோம். நாம் எந்த அளவின்படி அளக்கிறோமோ அந்த அளவின்படி தேவன் அளப்பார். லூக்-6:38 மனுஷர் உங்களுக்கு எப்படி செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ அப்படியே நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள். லூக்-6:31. மனுஷருக்கு நாம் செய்யும் கைமாறு கருதாமல் கடன் கொடுங்கள் அப்பொழுது பலன் மிகுதியாயிருக்கும் உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள். அவர் நன்றியறியாதவர்கட்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே. லூக்-6:35

பிரியமானவர்களே, ஒருவேளை இந்த தேசத்தில் வேலைக்காக வந்திருக்கிற நாம் வேலைகளின் நிமித்தம் உபவாசிக்க முடியாமல் இருக்கலாம் ஆனால் எளியவர்களுக்கு கொடுப்பதில் நாம் நம் மனதை பக்குவப்படுத்தலாம். உங்களுக்கு தெரிந்த எளியவர்களுக்கு உதவலாம். உங்கள் வேலை ஸ்தலத்தில் உள்ள எளியவர்களுக்கு உதவலாம் பணத்தினால் மாத்திரமல்ல மற்ற உதவிகளை செய்யலாம். சபையின் மூலம் தாங்கப்படும் திக்கற்றப் பிள்ளைகள் ஊழியத்திற்கு கொடுத்தும் இந்த உதவிகளை செய்யலாம். ஆதலால் வேண்டிக்கொள்வதற்கு அதிகமாய் நமக்கு கிடைப்பதற்கு நாம் கொடுக்கிறவர்களாய் இருப்போம் அதிகமாய் நமக்குக் கொடுக்கப்படும்.

கர்த்தருடைய கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக!.
அவருக்கே மகிமை உண்டாவதாக !
கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

R. ரவிச்சந்திரன்

## நாம் தெரிந்து கொள்ள பட்டவர்கள்

நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; (யோ – 15:16)

இவ்வுலகத்தை சிருஷ்டித்த தேவாதி தேவன் நம்மை தெரிந்து கொண்டார். இந்த உலகிலே இருக்கிற அநேக புற ஜாதி மக்கள் பல விதங்களில் தன்னுடைய சரீரத்தை காயப்படுத்தி துன்ப்படுத்தி படைத்த தேவனை தேட முயற்சிக்கின்றனர் , ஆனால் நம்முடைய வேதத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறுகிறார். நான் உங்களை தெரிந்து கொண்டேன் என்று. என்ன ஒரு ஆச்சரியமான அதிசயமான காரியம். தேவன் ஆபிரகாமை தெரிந்து கொண்டார். அதன் மூலமாக இஸ்ரவேல் ஜனங்களை தமக்காக தெரிந்து கொண்டார். இந்த உலகில் எத்தனையோ இனங்கள் இருந்தாலும் குறிப்பாக இஸ்ரவேல் ஜனங்களை ஆண்டவர் தெரிந்து கொண்டார். அதை போலவே ஆவிக்குறிய இஸரவேலர்களாக நம்மை தேவன் தெரிந்து கொண்டார். "எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்." (ரோமர் 8:30)

1 ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்;(1 கொரி 1:27)

இவ்வுலகில் மிகவும் சிறந்தவர்களாக ஞானிகள் காணப்படுகிறார்கள். இவர்களைதான் உலகம் போற்றி புகழ்கிறது. ஆனால் தேவன் இவர்களை வெட்கப்படுத்தும் படி பைத்தியமான நம்மை தெரிந்து கொண்டார். ஞானிகள் வேதத்தில் காரியங்களை நம்ப மறுக்கிறார்கள், கர்த்தரை சந்தேகிக்கிறார்கள். "அதிக படிப்பு உடலுக்கு இளைப்பு" (பிரசங்கி 12:12)படைப்பு இருக்கிறது என்றால் படைத்தவர் இருக்கிறார். என்பதை நம்ப மறுக்கிறது இந்த ஞானிகள் கூட்டம். எனவேதான் நம்மை தெரிந்து கொண்டார். திக்குவாயும் மந்த நாவும் உள்ள மோசேயை தெரிந்து கொண்டு எகிப்திய ஞானிகளை வெட்கப்படுத்தும்படி அவனை கொண்டு அடையாளங்களை நிறைவேற்றினவர் நமது தேவன். மீன் பிடித்து கொண்டிருந்த பேதுருவை தெரிந்து கொண்டார். அவன் பெரிய ஞானவான் அல்ல. ஆனால் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு அவர் ஒரு வல்லமையுள்ள அப்போஸ்தலனாக காணப்பட்டார் பேதுரு. ஒரே பிரசங்கத்தில் 3000 பேர் 5000 பேர் என்று இரட்சிக்கபட்டார்கள். இவ்வாறாக தேவன் பேதுருவை

பயன்படுத்தினார் எனவே நாமும் தேவனுக்குள்ளாய் ஒப்புகொடுக்கும்போது நம்மை பயன்படுத்துவார்.

2. பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்.

இந்த உலகம் பெரி காரியங்களை செய்ய பலவான்களை நாடுகிறது. ஆனால் பெவீனமானவர்களை தெரிந்து கொள்கிறார், கிதியோன் பயந்து போய்ஆலைக்கு சமீபமாய் போராடியபோது கர்த்தர் அவனை நோக்கி பார்த்து உனக்கு இருக்கிற இந்த பெலத்தோடு போ, நீ இஸ்ரவேலை மீதியானாரின் கைக்கு நீங்கலாக்கி இரட்ச்சிப்பாய்." என்றார் (நியா 6:14) மனாசேயில் என் குடும்பம் பெரியது. என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்கிறார். இவ்வளவு பெலவீனமான கிதியோனை கொண்டு பலமுள்ள மீதியானியரை வெட்கப்படுத்தி வெற்றியை கொடுக்கிறார்.

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு ஒரு பெவீனம் இருந்ததாக வேதத்தில் வாசிக்கிறோம், அவருக்கு சரீரத்தில் ஒரு முள் இருந்தது, கர்த்தரோ அவருடைய பெலவீனத்திலே தன்னுடைய பலத்தை பூரணமாய் விளங்க செய்தார். தேவன் அப்போஸ்தலனாகிய பவுலை அந்நாட்களில் எடுத்து பயன்படுத்தினார். அவர் எழுதின நிருபங்கள் இன்று வேதத்தில் இடம் பெற்று அநேகமாயிரம் தேவனுடைய பிள்ளைகளை தேவனுக்கு நேராய் வழிநடத்துகிறது. நான் பெலவீனமானவன் என்று ஓதுங்காதபடி தேவனிடத்தில் ஒப்பு கொடுக்கும் போது பலவீனமான நம்மை தேவன் பயன்படுத்துவார்.

3. உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்.(I கொரி 1:28)

தாவீது கர்த்தர் தெரிந்து கொண்டு சாமுவேலை தாவீது விட்டிற்கு அபிஷேகம் பண்ணும்படி அனுப்புகிறார். தாவீது தகப்பனாகிய ஈசாய் தன்னுடைய குமாரரில் ஏமு பேரை சாமுவேலுக்கு முன்பாக கடந்து போகபண்ணினார், தாவீதை கடந்து போக அழைக்கவில்லை, காரணம் தாவீது ஆடு மேய்ப்பவனாய் இருந்தான். அவனுடைய சகோதரர்கள் யுத்த புருஷராய் இருந்தார்கள். கர்த்தரோ அவர்களை புறக்கணித்து தாவீதை தெரிந்து கொண்டார் ஆடு மேய்த்த தாவீதை இஸ்ரவேல் ஜனங்களை அரசாளும்படியாக தெரிந்து கொண்டார்.

லேயாளும் அற்பமாய் எண்ணப்பட்டாள் என்று வேதத்திலே வாசிக்கிறோம். காரணம் அவளுடய தோற்றம் அழகற்று கூச்சப்பார்வையுடையதாய் இருந்தது.

ஆனால் கர்த்தர் லேயாள் பக்கம் நின்றவர். ஏராளமான குழந்தை செல்வங்களை தந்தார். அற்பமாய் எண்ணப்பட்ட லேயாள் மற்றும் தாவீதின் வம்சத்திலே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிறக்க சித்தமானார் ,தேவனுடைய பிள்ளைகளே ஒரு வேளை நாம் மற்றவர்களுடைய பார்வையிலே அற்பமாய் காணப்படலாம். புறக்கணிக்கப்படட்வர்களாய் இருக்கலாம்.ஆனால் தேவனுடைய அழைப்பும் தெரிந்து கொள்ளுதலும் விஷேசித்தது. தாவீது லேயாளை போல தேவனிடத்தில் நம்மை ஒப்பு கொடுப்போம் நம்முடைய வாழ்க்கையையும் தேவன் மாற்றிபோடுவார்

ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக !

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

அற்புதராஜ்

## உங்களுக்கு தெரியுமா?

1. நோபல் பரிசுகள் பெற்ற ஒரே நாடு எதுவென்று உங்களுக்கு தெரியுமா?

ஒரு சின்ன குட்டிநாடு மொத்தமே 1.5 கோடி தான் இதன் மக்கள் தொகை ஆனால் உலகத்தையே அவர்கள் தான் மறைமுகமாக ஆள்கிறார்கள் எப்படி?

கல்யாணம் பண்ணனும்னா ஏதாவது ஒரு துறையில் டாக்டர் பட்டம் வாங்கியிருக்க வேண்டுமாம்!

கல்லூரியில் சேர முதலில் 5000 டாலர் கொடுத்து ஏதாவது ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து 15 பேருக்கு வேலை கொடுத்த பின்பு அதை 15000 டாலராக மாற்றினால் தான் கல்லூரியில் சீட் கிடைக்குமாம். இதனால் இன்று உலகத்தில் உள்ள பாதி முக்கிய Branded நிறுவனங்கள் இந்த நாட்டை சேர்ந்தவைதான்.

உலகத்திலுள்ள அனைத்து சிறுவர் கார்ட்டூன் படங்களையும் தயாரிப்பது அவர்கள் தான். ஆனால் அந்நாட்டில் குழந்தைகள் கார்ட்டூர் பார்ப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

உலகத்தில் முதல் முறையாக தற்பொழுது வங்கிகளில் கடன் கொடுக்கும், கடன் வாங்கும் விதத்தை உலகத்துக்கு கற்றுக்கொடுத்தது இவர்கள் தான்.

7 கர்ப்பிணி பெண்கள் தொலைகாட்சி, சினிமா பார்க்க அனுமதிக்கப்படுவதில்லை

உலகத்தில் அதிகம் படித்த மேதாவிகளும் உலகத்தை மறைமுகமாக ஆளும் தந்திரமும் மிக்கவர்கள் உள்ள ஒரே நாடு இதுதான்.

அந்த நாடு தான் இஸ்ரேல்.

இந்தியனே உன் நாடு உன் கையில்!

கிறிஸ்துவின் பணியில்

S.ஆல்பர்ட்

# யூதாஸ்

யூதாஸ் என்பதற்கு இறைவனின் துதி என்று பொருள். ஸ்காரியோத் என்பதற்கு கொலைகாரன் என்று பொருள். இவன் தந்தையின் பெயர் சீமோன் இஸ்காரியோத். யூதாஸ்காரியோத் யூதேயாவை சேர்ந்த ஒரு யூதன். இவன் கொடியவனும், வஞ்சகனும், மாறுபட்ட பண்பு படைத்தவனுமாயிருந்தான். இயேசுவோடு நெருங்கிப் பழகிய எவரும் எப்பொழுதும் செய்யக்கூடாத கடினமான கொடிய செயலை யூதாஸ்காரியோத்து செய்தான். அதாவது அன்பே வடிவான தூய்மையின் பிறப்பிடமான குற்றமற்ற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை முத்தமிட்டுக் காட்டிக் கொடுத்தான். இந்த தீயச் செயலால் சீடர்கள் மட்டுமல்ல உலக மக்கள் அனைவருக்கும் வஞ்சகனாய் அறியக்கூடியவனானான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தெரிந்து கொள்ளுதலும் அவருடைய வழிநடத்துதலும் மனித அறிவுக்கு எட்டாத மறை பொருளாகவே இருக்கிறது. அவர் ஏன் தமக்கு எதிராக செயல்படுகிற ஒருவனை தெரிந்து கொண்டார் என்று எண்ணிப்பார்க்கும் போது, வேத வாக்கியம் நிறைவேறும்படிக்கே என்று நாம் புரிந்து கொள்ள முடிகிறது. யூதாஸ்காரியோத் இயேசு கிறிஸ்துவை ஓர் அரசியல் தலைவராகமாறலாம் அல்லது நாட்டுப்பற்று அதிகமாக உள்ளவர் அல்லது இவர் ஓர் புதிய அரசை நிறுவுவார் என்ற தவறான எண்ணங்களினால்தான் இயேசுவிடம் சேர்ந்தான். ஆனால் அவன் அந்த எண்ணத்தை கடைசிவரை மாற்றிக் கொள்ளவில்லை. ஆனால் யூதாஸ்காரியோத்தை தவிர மற்ற சீஷர்கள் இயேசுவை ஒரு போதகராக ஏற்றுக் கொண்டு மிகுந்த அன்பும் ஆர்வமும் அவரிடம் காட்டினார்கள். ஆனால் யூதாஸின் எண்ணமெல்லாம் எதிர் கால ஆட்சியைப்பற்றியதாகவே இருந்தது. ரோம ஆட்சிக்கு எதிரான அரசனை யார் பின்பற்றினாலும் அவர்களோடு சேர்ந்து கொள்ளவே யூதாஸ் விரும்பினான். யூதாஸ் பணப் பையை உடையவனாயிருந்தான் இயேசு அவனை ஒரு பொருளாளராகவே தெரிந்து கொண்டார். யூதாஸ் தோலால் ஆன கோட்டை அணிந்திருந்தான். அதில் சட்டைப் பைகள் இருந்தன. அவற்றை பணப் பையாக

யூதாஸ் பயன்படுத்தினான். எல்லா சீடர்களைப் பார்க்கிலும் இவன் தான் புத்தி கூர்மை உடையவனாக இருந்தான். ஆனால் அவன்தன் தாலந்தை தவறாக பயன்படுத்தினான். பண ஆசை அவனுக்கு கண்ணியானது. ஆசீர்வாதம் அவனுக்கு சாபமாக மாறியது. நான்கு நற்செய்தியாளர்களும் யூதாசை கொடியவன் என்றே கூறியுள்ளனர். திருந்திவாழும் நல்மனம் அவனிடத்தில் இல்லாதிருந்தது. பேதுரு மறுதலித்தான் ஆனால் மனங்கசந்து அழுது மனந்திருந்தினான் இயேசுவை சந்தித்தான். ஆனால் யூதாஸோ இயேசுவிடம் வராமல் பணத்தை எடுத்துக் கொண்டு பிரதான ஆசாரியரிடத்தில் ஓடினான். அங்கு அவனுக்கு ஆறுதலான வார்த்தை கூட கிடைக்கவில்லை. உன்பாடு என்று சொல்லி கைவிட்டனர். யூதாஸ் இயேசுவிடம் வந்திருந்தால் அவனுக்கு மன்னிப்பு கிடைத்திருக்கும். இன்றும் அநேகர் பவத்தை விரும்புகிறபடியால் இயேசுவின் அன்பு நிறைந்த வார்த்தைகளையும் அவருடைய வியக்கத்தக்க செயல்களையும் சாட்சியாக அறிவித்தாலும் பாவத்தின் மீதுள்ள ஈர்ப்பினால் அவர்களுடைய இருதயம் இயேசுவை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. இது மனித வாழ்க்கைக்கு ஒரு முழு இழப்பாகும்.

பஸ்கா பண்டிகைக்கு ஆறு நாளைக்கு முன்பு இயேசு லாசரு வாழ்ந்த ஊரான பெத்தானியாவுக்கு சென்றார். அன்று இரவு லாசரு வீட்டில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு இரவு உணவு ஆயத்தம் பண்ணப்பட்டிருந்தது. அப்போது லாசரு வின் சகோதரியான மரியாள் இலாமிச்சை என்னும் கலப்பற்ற விலை உயர்ந்த நறுமண தைலத்தை ஏறக்குறைய முந்நூற்று இருபது கிராம் கொண்டு வந்து இயேசு வின் காலடியில் பூசி அதனை தன் கூந்தலால் துடைத்தாள். தைலத்தின் நறுமணம் வீடெங்கும் கமழ்ந்தது. அப்பொழுது யூதாஸ்காரியோத் இந்த தைலத்தை முந்நூறு தெனாரியத்திற்கு விற்று ஏழைகளுக்கு கொடுக்கக் கூடாதா என்று கேட்டான். அவன் உண்மையிலே ஏழைகளின் மீது கொண்ட அக்கறையினால் கேட்கவில்லை. பணத்தின் மேலுள்ள இச்சையினால் கேட்டான். யாரும் இரு தலைவர்களுக்கு பணிவிடை செய்ய முடியாது. ஒருவரிடம் அன்பு கொண்டு மற்றவரை புறக்கணிப்பார்கள். இவ்விதமாக நாமும் கடவுளுக்கும் செல்வத்திற்கும் பணிவிடை செய்ய முடியாது. பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தைவிட்டு வழுவி அநேக வேதனைகளால் தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று மிக அழகாக பரி. பவுல் சொல்வதையும் நாம் வேதத்தில் வாசிக்கிறோம். யூதாஸ்காரியோத்தை தொடக்கத்திலேயே சீடர்கள் குழுவிலிருந்து நீக்கியிருக்கலாம். ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மிகுந்த இரக்கத்தோடு கூடிய அன்பினால் அவன் மனம் திருந்துவதற்கு பல வாய்ப்புகளைக் கொடுத்தார். ஆனால் அவன் கடைசிவரை திருந்தவே இல்லை. ஒருமுறை இயேசு கிறிஸ்து உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்று திட்டவட்டமாக சொன்னார். யாரைப் பற்றி இப்படி சொன்னார் என்று தெரியாமல் சீஷர்களே குழப்பமுற்று ஒருவரையொரு வர் பார்த்தார்கள்.

# 2016 – பிப்ரவரி மாத விடைகள்

1. ஸ்திரியுடனே விபசாரம் பண்ணுகிறவன் – நீதி மொழிகள் 6:32

2. மன மகிழச்சி ---- நீதி மொழிகள் 15:13

3. சாலொமோன் -- நீதி மொழிகள் 13:13

4. புத்திமதிகளை காத்து கொள்கிறவன் --- நீதி மொழிகள் 10:17

5. நீதி மொழிகள் 2 : 17இ19

6. கிருபையும் சத்தியமும் --- நீதி மொழிகள் 3:3

7. நீதி மொழிகள் 23:7

8. நீதி மொழிகள் 20:29

9. நீதி மானுக்கு ஒரு கேடும் வராது ----நீதி மொழிகள் 12:21

10. பரியாசக்காரர்கள் பட்டினத்தில் தீ கொளுத்தி விடுகிறார்கள்
--- நீதி மொழிகள் 29:8

11. மாறுபாடுவுள்ளவன் கர்த்தருக்கு அருவருப்பானவன், நீதிமான்களோடே அவருடைய இரகசியம் இருக்கும் ----- நீதி மொழிகள் 3:32

12. நீதி மொழிகள் 7:10,23

13. நீதி மொழிகள் 27:7

14. நீதி மொழிகள் 23:32

15. நீதி மொழிகள் 27:22

## 2016 – பிப்ரவரி மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்புக்குமார்
Sis. மரகதம் ஸ்டீஃபன்
Sis. செலின் டேவிட்
Sis. டெய்ஸி எபிநேசர்
Sis. சாந்தி
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. பத்மினி வர்கீஸ்
Sis. ஜோன் அசோக்குமார்
Sis. ஆனந்தி
Sis. தயா இயேசு ரெத்தினம்
Selvi . ஜெஸ்வினி இயேசுதாஸ்

Bro. ஜாண்ஸன்
Bro. கிறிஸ்டோபர். M

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; . . . . . . " (ஆதி – 12:2)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. ஜான்சி ராணி ராஜவேல்
செல்வி. திவ்யா அருள்மணி
செல்வி. ஜெசிந்தா தர்மசகாயம்
செல்வி. நிகிட்டா அருண் இம்மானுவேல்
செல்வி. ஷேர்லி ஸ்ரீனிவாசன்
செல்வி. ஸ்டெஃபானா சதீஸ்குமார்
செல்வி. ஜெஸ்வின் M. யேசுதாஸ்
செல்வி. அபியா செல்வி தர்மர்
செல்வி. ஜாஸ்மின் ஏஞ்சல் தாமஸ்

செல்வன். ஜோஷ்வா பால் பாண்டியராஜ்
செல்வன். ரையன் சாமுவேல் ஜான்சன்
செல்வன். ஆல்வின் வர்கீஸ்
செல்வன். ஜாண்ராஜ் ராஜவேல்
செல்வன். ஜெகு சாமுவேல் செல்வசிங்
செல்வன். அட்ரியல் கேமுவேல் தாஸ்
செல்வன். சிசில் செல்வதாஸ்

சகோதரி. வித்யா வில்சன்
சகோதரி. சுதா மனோகரன்
சகோதரி. சிஜோ ஸ்ரீதர்
சகோதரி. ஆஸ்லி முத்தையா
சகோதரி. கீதா ஜெயக்குமார்

சகோ. அருள்மணி
சகோ. சுனில் சுந்தர்ராஜ்
சகோ. ஜெயக்குமார்
சகோ. சாமுவேல்
சகோ. ஜாண் மில்லர்
சகோ. விசு
சகோ. ஜாண்போஸ்கோ
சகோ. யேசுரெத்தினம்
சகோ. முத்தையா
சகோ. ராஜா ரவிச்சந்திரன்
சகோ. லாசர் ராஜமணி
சகோ. பால் டேனியேல்

**...பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்..**

**(ஆதி – 12:3)**

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி & திரு. ஆசீர்வாதம்
திருமதி & திரு. லாசர் ராஜமணி
திருமதி & திரு. சுகுமார்
திருமதி & திரு. சத்தியநாதன்

**சபையின் செயற்குழு சார்பாக**
**இனிய பிறந்த நாள் மற்றும்**
**திருமண நாள் வாழ்த்துக்கள்**

# 2016 மார்ச் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/03/2016 | சகோ. ஐசக் துரை | சுகோ. ஸ்டாலின் |
| . 13/03/2016 | சுகோ.ஆரோக்கியதாஸ் | சுகோ. ஜெயசேகர் |
| .20/03/2016 | Rev. Rowlandskay. Tamil nadu | |
| .27/03/2016 | உயிர்த்தெழுந்த ஞாயிறு ஆராதனை (Easter sunday)<br>Rev. Rowlandskay. Tamil nadu | |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04/03/2016 | சகோ. ஜெயசேகர் | பாஸ்டர் .<br>சீர்காழி இயேசு பிரகாசம் |
| 11/03/2016 | சகோ. வில்ஸன் | சகோ. ரவிச்சந்திரன் |
| 18/03/2016 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 25/03/2016 | பெரிய வெள்ளி ஆராதனை<br>Rev. Rowlandskay. Tamil nadu | |

10/03/2016

முழு இரவு ஜெபம் நேரம் இரவு 10:00மணி முதல் காலை 2:00மணி வரை

ஆராதனை . சகோ . அற்புதராஜ்

**தேவ செய்தி . பாஸ்டர் . சீர்காழி இயேசு பிரகாசம்**

27/03/2016 அன்று வாலிப ஐக்கிய கூடுகை

நேரம் மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை

# 2016 மார்ச் மாதத்திற்கான வேத வினா!

## கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

1. ஜெபத்திலேஉறுதியாய் தரித்திருங்கள், என்றது யார்?
2. விசுவாசத்தினால் வராதது என்ன? என்று பவுல் சொல்லுகிறார்?
3. விசுவாசத்தில் வல்லவர் யார்?
4. அக்கிரமகாரருக்காக மரித்த ஒரு நீதிமான் யார்?
5. கனம் பண்ணுவதில் ஒருவரை ஒருவர் முந்திக்கொள்ளுங்கள் என்றவர் யார்?
6. ரோமாபுரியில் கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட ஸ்திரி யார்?
7. தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்பு கொடுத்தார் என வாசிப்பதெங்கே?
8. தேவன் அவர்களை கேடான சிந்தனைக்கு ஒப்பு கொடுத்தார் என்று வாசிப்பதெங்கே?
9. தீமையை வெறுத்து நன்மையை பெற்றுக் கொண்டிருங்கள் என்று வாசிப்பதெங்கே?
10. எனக்கு இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது என்றது யார்?
11. தேவனுடைய வாக்குத்தத்தத்தை குறித்துஅவன் விசுவாசமாய் சந்தேகபடாமல்... விசுவாசத்தில் வல்லவனானவன் யார் ?
12. மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து அவ பக்தியை யாக்கோபை விட்டு விலக்குவர் என்று வாசிப்தெங்கே ?
13. தேவன் தான் முன்னரிந்துகொண்ட தம்முடைய ஜனங்களை தேவன் தள்ளிவிடவில்லை எனவாசிப்பதெங்கே?
14. அவர்கள் வாய் சபிப்பினாலும் கசப்பினாலும் நிறைந்திருக்கிறது எனவாசிப்பதெங்கே?
15. கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள் என்றது யார்?

விடைகளை வருகின்ற 18/03/2016க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரிலோ அல்லது வாட்ஸ்ஆப்ஸிலோ (whatsApps # 66015503 - with Name ) அனுப்பும்படி (கொடுக்கும்படி) கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை"ரோமர் ˉ "புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

**– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – –**

மத்தேயு 7:7

[1]இயேசுவின் அன்பின் சீஷனான யோவான் அப்போது இயேசுவின் மார்போடு சாய்ந்திருந்தான். அவன் மேல் இயேசு தனி அன்பு கொண்டிருந்தார். உடனே சீமோன் பேதுரு யோவானுக்கு சைகை காட்டி யாரைப்பற்றி இப்படி கூறுகிறார் கேள் என்றார். யோவான் இயேசுவின் மார்பில் சாய்ந்து கொண்டு ஆண்டவரே அவன் யார் என்று கேட்டான். இயேசு மறு மொழியாக நான் யாருக்கு அப்பத்துண்டை தோய்த்து கொடுக்கிறேனோ அவன்தான் என்று சொல்லி அப்பத்துண்டைத் தோய்த்து சீமோன் ஸ்காரியோத்தின் மகனாகிய யூதாஸ்க்கு கொடுத்தார். அவன் அப்பத்துண்டை பெற்றதும் சாத்தான் அவனுக்குள் நுழைந்தான். இயேசு அவனை பார்த்து செய்யப்போகிறதை சீக்கிரமாய் செய் என்றார். இயேசு ஏன் அவனிடம் இப்படி சொன்னார் என்பதை பந்தியில் இருந்தோர் யாரும் புரிந்து கொள்ளவில்லை. யூதாஸ்காரியோத் நேராக பிரதான ஆசாரியரிடம் சென்று நானே இயேசுவை உங்களுக்கு காட்டிக் கொடுப்பேன் எனக்கு என்ன தர நினைக்கிறீர்கள்? என்று கேட்டான். அவர்களும் முப்பது வெள்ளிக் காசை கொடுத்தார்கள். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஒரு அடிமையின் விலை இருபது வெள்ளிக் காசுகள். இயேசுவின் காலத்தில் முப்பது வெள்ளிக் காசுகள். ஜனக்கூட்டம் இல்லாத ஓர் இடத்திலே இயேசுவும் அவருடைய சீஷர்களும் ஜெபிப்பதுண்டு. இயேசு தம் சீஷர்களோடு கெதரோன் என்னும் நீரோடையை கடந்து சென்றார். அங்கே கெத்செமனே தோட்டம் இருந்தது. வழக்கம் போல தம் சீஷர்களோடு அங்கு சென்றார். யூதாஸ்காரியோத்திற்கும் அந்த இடம் தெரிந்திருந்தது. ஏனெனில் இயேசுவும் அவருடைய சீஷர்களும் அங்கு கூடுவது வழக்கமாக இருந்தது. இயேசு ஜெபித்துக் கொண்டிருக்கும் போது யூதாஸ்காரியோத்தும் படைப்பிரிவினரும் பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பரிசேயர் அனுப்பிய காவலாளர்களும் பந்தங்களோடும் தடிகளோடும் ஆயுதங்களோடும் அங்கே வந்தார்கள். தமக்கு நிகழப்போகிற அனைத்தையும் அறிந்த இயேசு நீங்கள் யாரைத் தேடுகிறீர்கள்? என்று கேட்டார். அவரை காட்டிக் கொடுக்க இருந்த யூதாஸும் அவர்களோடு நின்று கொண்டிருந்தான். யூதாஸ் நான் யாருக்கு முத்தமிடுகிறேனோ அவர் தான் இயேசு என்று ஏற்கனவே அவர்களுக்கு சொல்லி இருந்தான். அவன் நேராக இயேசுவிடம் வந்து: ரபீ வாழ்க என்று சொல்லி நமது அருமையான ஆண்டவர் இயேசுவை முத்தம் செய்தான். அப்பொழுது கூட இயேசு யூதாஸ்காரியோத்தை பார்த்து சிநேகிதனே என்றுதான் அழைத்தார் (இப்படிப்பட்ட நல்ல தேவனை நீங்கள் எங்கும் காண முடியாது). போர்ச்சேவகர்கள் உடனே இயேசுவை கைது செய்தார்கள். பொழுது விடிந்ததும் தலைமை குருக்களும் மூப்பர்களும் இயேசுவுக்கு விரோதமாக பொய் சாட்சிகளை சொன்னார்கள். கடைசியாக யூதர்களை பிரியப்படுத்த மனதுள்ளவனாய் பிலாத்து இயேசுவை சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்தான். இயேசுவுக்கு மரண தண்டனை கொடுத்ததை காட்டிக் கொடுத்த யூதாஸ்காரியோத் கண்டபோது மனம் வருந்தி பிரதான ஆசாரியரிடமும் மூப்பர்களிடமும் முப்பது வெள்ளிக்காசை திரும்ப கொண்டு வந்து ஒரு பாவமும்

செய்யாத குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் நான் பாவம் செய்தேன் என்றான். அதற்கு அவர்கள் எங்களுக்கென்ன நீயே பார்த்துக் கொள்: அது உன்பாடு என்றார்கள். பின்பு அந்த வெள்ளிக்காசை கோவிலில் எறிந்துவிட்டு புறப்பட்டுப் போனான். தலைமைக் குருக்கள் அந்த வெள்ளிக்காசை எடுத்து இது இரத்தத்திற்கான விலையானதால் இதை கோயில் காணிக்கை பெட்டியில் போடுவது முறையன்று என்று சொல்லி கலந்தாலோசித்து அந்நியரை அடக்கம் செய்ய அவற்றைக் கொண்டு குயவன் நிலத்தை வாங்கினார்கள். இதனால் அந்நிலம் இரத்த நிலம் என்று அழைக்கப்படுகிறது. இதைப்பற்றி எரேமியா தீர்க்கதரிசி முன்னமே தீர்க்கதரிசனமாக சொல்லியும் இருக்கிறார் (எரே. 19:3-6). யூதாஸை பார்த்தவர்கள் எல்லாரும் இப்படி குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டாயே என்று சொல்லியிருப்பார்கள். யூதாஸ்காரியோத் மனமுடைந்தவனாக தன்னுடைய தவறான செயலுக்காக வெட்கப்பட்டு மனம் நொந்து நாண்டு கொண்டு செத்தான். தன் முடிவை தானே தேடிக் கொண்டான். கல் எத்தனை நாட்கள் தண்ணீரில் இருந்தாலும் அது தண்ணீரை உறிஞ்சுவதில்லை. யூதாஸ்காரியோத்துக்கும் கல்லைப் போன்ற கடின இருதயம் இருந்ததால் ஆண்டவராகிய இயேசுவோடு இருந்தும் அவருடைய போதனைகளைக் கேட்டும், அற்புதங்களை கண்டும், இயேசுவோடு உண்டும் பழகியும், கடைசிவரை மனம் திரும்பவில்லை. தன் மனதை கடினப்படுத்திக் கொண்டான். பசு குடிக்கும் தண்ணீர் பாலாய் கிடைக்கிறது. பாம்பு குடிக்கும் தண்ணீர் விஷமாய் வருகிறது. இன்று பாவத்தை செய்வதற்கு சந்தர்ப்பம் மட்டுமே முக்கிய காரணம் என்று கூறுகிறோம். பாவத்தில் ஈடுபடுவதின் பலனை சிறு பொழுதில் அறிந்து விடுகிறோம். ஆனால் அந்த குற்றத்தின் வழி எங்கே முடியும் என்று நமக்கு தெரியாது. ஜாக்கிரதை! ஜாக்கிரதை!!

கர்த்தருக்கு பயந்து நடக்கிற தேவனுடைய ஜனங்களையே தேவன் மேன்மேலும் ஆசீர்வதிப்பார்.

கிறிஸ்துவுக்குள்

அன்புள்ள சகோதரன்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு தாங்கள் நேர்ந்து கொண்ட காணிக்கைகளை, திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று சகோதரர் எபிநேசர் அவர்களிடத்திலும், இந்திய தேச ஊழியர்களை தாங்கும் ஊழியத்திற்கென்று சகோ. ஆரோக்கியராஜ் அவர்களிடத்திலும், போக்குவரத்து(Transport) ஊழியத்திற்கென்று சகோ. வில்ஸன் அவர்களிடத்திலும், தங்களது காணிக்கைகளை கொடுத்து ஊழியத்தை தாங்கும்படி பணிவன்புடன் கேட்டு கொள்கிறோம் (மறவாமல் ரசீது பெற்று கொள்ளவும்).

## ஜாண்ஹோல்ம்ஸ் (1866–1934)

இங்கிலாந்து 1877–ம் ஆண்டு நிரம்பிய ஜாண் ஹோல்ம்ஸ் தனது சிறிய கிராமமான ஹார்பர்டோன் போர்டுவிலிருந்து தனது குடும்ப சூழ்நிலையின் காரணமாக, தனது மாமாவின் வீட்டிற்குச் சென்று வர்ணம் பூசும் பணியை மேற்கொள்ளப் பயணமானார். அவரது பக்தி மிகுந்த தாய் அவருக்காக ஒரு பெட்டியை ஆயத்தப்படுத்தி, அதில் அவரது துணிமணிகள், வேதாகமம், ஞானப்பாட்டு புத்தகம் மற்றும் சிறிய பணப்பையையும் வைத்ததுடன் பெட்டியின் மூடியில் ராபர்ட் மொபட் என்ற ஆப்பிரிக்கா தேசத்து மிஷனெரியின் படத்தையும் ஒட்டி அனுப்பி வைத்தார். தனது மாமா வசிக்கும் பகுதியான பரன்ட் என்ற இடத்திற்கு பேருந்தில் பயணம் செய்து வந்து வீடு சேர்ந்தார். அன்று இரவு தூங்கும்முன் தனது பெட்டியைத் திறந்து பார்த்தபோது தனது அன்புத் தாய் தனக்காக அழகாக அடுக்கி வைத்த பொருட்களைப் பார்த்து மகிழ்ந்த அவர் பெட்டியின் மூடியில் இருந்த ராபர்ட் மொபட்டின் படம் அவரைச் சிந்திக்க வைத்தது. ஞாயிறு வேதாகமப் பள்ளியில் அவர் கற்ற மிஷனெரி மொபட்டின் வாழ்வு அவரது மிஷனெரி மொபட்டின் வாழ்வு, அவரது மிஷனெரி பணி கண்முன் தோன்ற தானம் ஆப்பிரிக்கா தேசத்தில் மிஷனெரியாகப் பணிபுரிவது போன்ற கனவுகளுடன் அன்று இரவு தூங்கினார். இரவு படுக்கைக்கு போகுமுன் வேதத்தை வாசித்து தனது பெட்டியில் வைக்கும் போது மொபட்டின் படத்தைப் பார்த்து நானும் ஆப்பிரிக்காவுக்கு மிஷனெரியாக செல்வேன் என்று அர்ப்பணித்தார்.

1886–ம் ஆண்டு பிளைமாவ்த் என்ற இடத்திலுள்ள வெஸ்டர்ன் கல்லூரியில் சேர்ந்து வேதத்தைப் படிக்க ஆரம்பித்தார். அந்த கல்லூரியில் படிக்கும்போது இந்தியா, சீனா பகுதியில் பணிபுரியும் மிஷனெரிகளைப் பற்றியும் அறிந்தார். லண்டன் மிஷனெரி ஸ்தாபனத்தில் இணைந்து ஆஸ்திரேலியாவுக்கு கப்பலில் பயணமானார். நாமாவ் என்ற மக்களிடத்தின் மத்தியில் ஊழியம் செய்தார். அந்த மக்களின் தலைவனால் தரப்பட்ட ஒரு குடிசையில் வாழ ஆரம்பித்தார். ஜாண். அங்குள்ள மக்களிடம் நட்புடன் பழகினார். முதலில் ஜாண் ஒரு சிறிய படகை அங்கு கிடைத்த மரப்பலகையினால் செய்து நன்றாக துடுப்பு போட்டுப் படகை செலுத்தும் 12 வாலிய பையன்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து அந்த படகின் மூலம் ஒவ்வொரு கிராமமாக சந்திக்கச் சென்றார். ஒரு கிராமத்திற்குச் சென்றபோது அங்கு நடந்த விழாவில் இறந்த உடல்களைச் சுற்றி பெண்களின் நடனத்தையும் கொட்டு முரசுகளின் சத்தத்தின் மத்தியில் மனித உடல்களைச் சமைத்து ஆரவாரத்துடன் உண்ட அந்த மக்களின் முகத்தில் இருந்த கொரூரத்தன்மையும் மறக்கமுடியவில்லை.இப்படிப்பட்ட நரமாமிசப் பட்சிணிகளை நான் எப்படி நண்பனாக்கி நற்செய்தியைச் சொல்ல முடியும்? என்று வியந்தார்.

முதலில் அவர்களது மொழியைக் கற்கவேண்டும் என்று அவர்கள் ஒலி எழுப்பும்போது அதே சத்தத்தை பென்சிலால் எழுதிக் கொள்வார். ஜாணிடம் அதிகக் காகிதங்கள் இல்லாததால் தனது வெள்ளைத் தொப்பி, வெள்ளை அரைக்கால் சட்டையில் கூட எழுதி வைத்திருந்தார். அவர்கள் பேசுவதுபோல பேசவும் ஆரம்பித்தார், வெள்ளை மனிதன் நமது மொழி பேசுகிறார் வந்து கேளுங்கள் என்று இவரது குழுவிலிருந்த பையன்கள் எல்லா இடத்திலும் அறிவித்தனர். அவரிடம் கத்தியோ, துப்பாக்கியோ வேறு எந்த ஆயுதமோ இல்லை, படிப்பதற்கு ஒரு புத்தகமும் நதியின் தண்ணீரின் ஆழம் எவ்வளவு என்று அறிய ஒரு கோலும் மட்டுமே உள்ளது என்று அறிந்த மக்களும் ஆவலுடன் வந்து நற்செய்தியைக் கேட்டனர். 1902–ம் ஆண்டு இங்கிலாந்து திரும்பிய ஜாண் திருமணம் செய்துகொண்டு தனது மனைவியுடன் திரும்பி வந்து நியூகினியா பகுதியில் யுரிகா என்ற கடற்கரைப் பகுதியில் ஒரு சிறிய குடிசையில் வாழ்ந்து மிஷனெரிப் பணியைத் தொடர்ந்தார். மக்களிடையே ஏற்பட்ட சண்டைகளால் பல மனிதர்கள் கொல்லப்பட்டனர், பல கிராமங்கள் பாழாயின. எலும்புகளால் தெருக்கள் நிறைந்தன. இவர்களது மூடப்பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட இந்த மக்களுக்கு கல்வி ஞானம் தேவை என்று உணர்ந்த ஜாண் சிறு பள்ளி அமைத்து பாடங்களை சொல்லிக் கொடுத்தார். வீடு கட்டிக்கொடுத்து அதில் வாழக் கற்றுக்கொடுத்தார். தென்னை மரம் நடுதல், பாய் முடைதல்,

நெய்தல் போன்றவற்றையும் சொல்லிக்கொடுத்தார். தினமும் காலை ஆறு மணிக்கு தனது வீட்டின் வாசலிலிருந்து விசில் சப்தம் எழுப்பி மக்களை வரவழைப்பார். காலை ஜெபத்திற்ககுப் பின் குழுக்களாகப் பிரித்து வேலை கொடுப்பார். இப்படி வேலை செய்வதின் பயனையும் உணர்த்தினார்.

அவர்களது மூடப்பழக்க வழக்கத்தினின்று விடுவிக்க அவர்களை வேலைகளில் ஈடுபடுத்தினார். மந்திரவாதிகளுக்கு அதிகம் பயந்த மக்கள் தங்களது வெட்டின நகங்கள், விழுந்த முடிகளைக் கூட பத்திரமாக எரித்தனர். கடவுளின் பிள்ளைகளை மந்திரவாதம் ஒன்றும் செய்யாது என்று உணர்த்த ஜாண் தனது கைக்குட்டை, பென்சில் போன்ற பொருட்களை மந்திரவாதிகளின் கண்முன்னே விட்டுச் செல்வார். யூரிகா என்ற இடத்தில் பள்ளிக்கூடம், சிறு தொழிற்கூடம், ஆலயம் நிறுவப்பட்டு திறம்படச் செயல்பட்டது. இவை மட்டுமல்லாமல் தனது சிறிய படகில் வெகுதூர பயணம் மேற்கொண்டு பல தூரத்துக் கிராமங்களைச் சந்தித்தார். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு ஆசிரியர்களை அனுப்பி அங்கு சிறு பிள்ளைகளுக்கு பாடங்களைச் சொல்லிக்கொடுப்பதற்கும் ஆலயங்களை நடத்துவதற்கும் நியமித்தார். படகுக் குழுவில் இருந்த வாலிபர்கள் ஜாணை தந்தை, எஜமான், முதியவர் என்று ஹோமு என்றும் அன்பாக அழைத்தனர். குழுவுடன் பயணம் செய்யும்போது வெள்ளை ஆடை அணிந்து வெள்ளை தொப்பியுடன் காணப்படுவார். கையில் வேதாகமம் எப்போதும் வைத்திருப்பார். ஜெபத்தின் வல்லமையைச் சொல்லிக் கொடுப்பார். கடலில் பயணம் செய்யும்போதும், புயல் அலைக்கழிக்கும்போதும், ஜாண் ஜெபித்து வெற்றி காணுவதைக் கண்ட குழுவிலிருந்த வாலிப பையன்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்தனர்.

1912–ம் ஆண்டு 250 பேர் உட்காரும் அளவு ஒரு பள்ளியும், ஒரு சிறிய ஆலயமும் கட்டப்பட்டது. 5000 தென்னை மரங்கள் நடப்பட்டன. உணவிற்கான எல்லா கொருட்களையும் விளைவிக்கும் ஒரு பெரிய தோட்டத்தையும் உருவாக்கினார். நாமாவ் மக்களின் மொழியில் வார்த்தைகளைச் சேகரித்து, புதிய ஏற்பாட்டை அவர்களது மொழியிலேயே படிப்பதற்கு பேசுவதற்கு ஏற்றவாறு மொழி பெயர்த்தார் ஜாண். ஹோமுவின் ஆண்டவரின் புத்தகம் இது இதனை நான் வாசிக்க முடியும் என்று வயதான காட்டு மிராண்டி மனிதன் கூறினார். தூரத்துக் கிராம மக்கள் நாங்கள் தேங்காய் தருகிறோம், எங்களுக்கு வேதாகமம் தாருங்கள் என்று வாங்கிச் சென்றனர். கொழுமையான பன்றியைத் தருகிறோம் எங்களுக்கு அதிக புத்தகங்களைத் தாருங்கள் என்றனர். படிக்கத் தெரிந்தவர்களுக்கு மட்டுமே ஜாண் வேதத்தைத் தந்ததால் படிப்பதற்காக அவரது பள்ளியில் அதிக மாணவர்கள் வந்து சேர்ந்தனர். குழுக்கள் மத்தியில் சண்டைகள், கொடூரமான கொலைகள் மறைய ஆரம்பித்தன. ஹோமுவின் பெயர் சமாதானத்தின் பெயர் என்று மக்கள் அழைத்தனர். 27 வருடம் நாமாவ் மக்கள் மத்தியில் பணிபுரிந்த ஜாண் ஹோல்ம்ஸ் சுகவீனப்பட்டு 1919–ம் ஆண்டு இங்கிலாந்து திரும்பினார். நான் இங்கிலாந்திற்குப்போய் இன்னும் அநேக மிஷனெரிகளை உங்களுக்கு அனுப்புவேன் அவர்கள் வந்து உங்களுக்கு கிறிஸ்துவைப் பற்றி அறிவிப்பார்கள் என்று சொல்லி விடைபெற்றுச் சென்றார். அவருக்கு அன்புடன் பிரியா விடை கொடுத்த நாமாவ் மக்களும் தலைவரும் நீர் எங்களது நண்பர், உமது சமாதான வார்த்தையில் நாங்கள் சண்டையிடுவதை விட்டுவிட்டோம், உமது வானளாவிய எண்ணங்களும் வார்த்தைகளும் எங்களது உலகத்தையே தலைகீழாக மாற்றிவிட்டது என்றனர். மேற்குப் பாப்புவா பகுதியின் நாமாவ் மக்களுக்கு முதலில் நற்செய்தியை எடுத்துச் சென்றவர் ஒரு வர்ணம் பூசும் சாதாரண தொழிலாளி ஜாண் ஹோல்ம்ஸ் என்று இன்றும் மக்கள் மத்தியில் நினைவு கூறப்படுகிறார். கடலில் பயணம் செய்யும்போதும், புயல் அலைக்கழிக்கும்போதும், ஜாண் ஜெபித்து வெற்றிக் கண்டார். (தொகுப்பு)

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

சுகமார்

## சகோதரிகள் பகுதி

# சிலுவையின் மேன்மை

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இனிய வாழ்த்துகளை தெரிவிக்கிறேன். இச்செய்திமலரின் மூலமாக தங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இயேசு கிறிஸ்து தமது விலையேறப் பெற்ற இரத்தத்தைக் கல்வாரிச் சிலுவையில் சிந்தி மனுக்குலத்துக்கு, பாவமன்னிப்பாகிய நித்திய மீட்பை அவர் உண்டு பண்ணினார். அது மாத்திரமல்ல, பகையைச் சிலுவையினால் கொன்று சமாதானத்தை உண்டாக்கி, பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கினார். (எபேசியர் 2:26, கொலோ 1:20)

“தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல” என்றும் “ஒருவன் என்னைப் பின் பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்” என்றும் இயேசு தமது சீஷர்களுக்குப் போதித்தார். (மத் 10:38, மத் 16:24, மாற்கு 8:34, லூக்கா 9:23)

உலகம் தரக் கூடாத சமாதானத்தை அவர் நமக்குத் தருகின்றார். பாவமான காரியங்களை நாம் வெறுத்து அவரை மாத்திரம் நாம் பின்பற்றும் போது நமக்கு விலையேறப் பெற்ற இரட்சிப்பின் நிச்சயத்தையும் பரலோக வாழ்வையும் நமக்குத் தருகிறார். அவரைப் பின் பற்றினால் மாத்திரமே நாம் அவரின் சீஷராக, ஊழியராக மாற முடியும்.

அப்போஸ்தலனாகிய பவுல் “நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்” என்றும் ‘கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப் பட்டேன் ஆனாலும் பிழைத்திருக்கிறேன், இனி நானல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்” என்றும் சிலுவையின் மகாமேன்மையைக் குறித்து நிருபங்களில் எழுதியிருக்கிறார். (ரோமர் 1:16, 6:6, 1கொரி1:18, 27:31)

இவ்வுலகப் பாடுகள் நமக்கு நிரந்தரமானதல்ல. அப்பாடுகளின் மத்தியிலும் நாம் நம் இயேசுகிறிஸ்துவை சார்ந்து வாழ்வோமானால் நமக்கு நித்திய மீட்பும் அளவில்லாத சமாதானமும் உண்டு. அவருடைய சிலுவை அன்பு, உலக மக்கள் யாராலும் தரக்கூடாத தனிப்பட்ட மேன்மையுடையது. தெய்வீக சமாதானமும் சந்தோஷத்தையும் நம்மை தரக் கூடியது. நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் மேன்மேலும் வளரச் செய்யும். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் விலையேறப் பெற்றது. அவருடைய அன்பிற்கு ஈடான அன்பு இந்த உலகத்தில் இல்லை. –மனிதர்கள் நம்மைக் கைவிட்டாலும் இயேசு மாத்திரமே நம் மரணம் பரியந்தம் நம் கூடவே வருகின்றவர்.

 அவர் நமக்காக கல்வாரிச் சிலுவையில் பாடுபட்டார், காயப்பட்டார், நொறுக்கப்பட்டார். நாம் அவருக்காக என்ன செய்கின்றோம்? இந்த ஒரே ஒரு வாழ்வை அவருக்காக நாம் நம்மையே அர்ப்பணித்து வாழ்வோமாக! இந்த ஆண்டு ஓர் ஆசீர்வாதமான ஆண்டாக விளங்க நம்மை காணிக்கையாக அவரிடம் அர்ப்பணித்து ஆசீர்வாதத்தை பெறுவோமாக!

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி

**பியூலா மெர்ஸி பால் ஜெகநாதன்.**

## அறிவிப்பு பலகைகள் (Notice Boards)

நமது அன்றாட வாழ்க்கையில் நம்மை எச்சரிக்கவும். நமக்கு வழிகாட்டவும் அநேக அறிவிப்பு பலகைகள் தெருக்களிலும் கடைகளிலும் வீடுகளிலும் அலுவலகங்களிலும் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை நமது கிறிஸ்தவ வாழ்க்கையோடு ஒப்பிடக் கூடிய சிலவற்றை இங்கே கவனிப்போம்.

### 1. அபாயம் (Danger)

(1) பாவத்தின் சம்பளம் மரணம் (ரோ.6:23) (2) பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும் (எசேக்.18:4,18) (3) உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் (எண்.32:23)

### 2.இங்கே நடக்கக் கூடாது (Don´t walk here)

(1) துன்மார்க்கருடைய ஆலோசனையின்படி நடவாதே (சங்.1:1)

(2) மாம்சத்தின்படி நடவாதே (ரோ.8:1,4,5,– 2.பேது.2:7,10) (3) ஒழுங்கற்று நடவாதே (2.தெச.3:6, 2.கொரி.4:2, எபேசி.4:17, 5:15)

### 3. நல்வரவு (Welcome)

(1) வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத்.11:28)

(2) எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. கலியாணத்திற்கு வாருங்கள் (மத்.22:4, லூக்.15:28) (3) கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படவரே, உள்ளே வாரும் நீர் வெளியே நிற்பானேன் (ஆதி.24:31).

### 4. சாப்பாடு தயார் (Meals Ready)

(1) ஜீவ அப்பம் நானே, என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு. (யோ.6:48,54 –56, 1.கொரி.11:26, 10:16–17) (2) என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்கு பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது. நானோ பசியினால் சாகிறேன் (லூக்.15:17, ஆதி.25:34) (3) கர்த்தருடையசமுகத்தில் வாசமாயிருக்கிறவர்கள் திருப்தியாகச்சாப்பிடவும் நல்ல வஸ்திரங்களைத் தரிக்கவும் அதின்வியாபாரம் அவர்களைச்சேரும்

(ஏசா.23:18, 1.இராஜா.17:1–6)

# கடந்த மாத நிகழ்வுகளில் தங்கள் பார்வைக்கு சில














## உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

### செயற்குழு உறுப்பினர்கள்

**தலைவர் – சகோ. ரவிச்சந்திரன்**

23913675 - 66889706

**செயலாளர் – சகோ. ஜெயசேகர்**

**23711698 - 96646444**

**பொருளாளர்– சகோ. ஆரோக்கியதாஸ்**

**99870126**

**பெண்கள் ஐக்கிய சங்க தலைவி**

**சகோதரி . பியூலா ஜெகநாதன்**

**வாலிப ஐக்கிய தலைவர் – சகோ. அற்புதராஜ்**

60692485

Church Website Address – **ahmaditamilcongregation.org**

Church 'E' mail ID – **ahmaditamil.kw@hotmail.com**

Church Postel Address

Your name – Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

**தங்களது ஜெப விண்ணப்பங்கள்**
**எதுவாக இருந்தாலும்**
**எங்களுக்கு தெரிவிக்கவும்**
**உங்களுக்காக ஜெபிக்க**
**ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.**

GOODSALT.COM

Private Circulation only